


# 46 நாடுகள்


ஆக்கம் :- துரையர்

:- S.p சர்மா

# 46

# நாடுகள்

ஆக்கம் :

துரையர்

S. P. சர்மா

பாமா வெளியீடு

நூல் : 46 நாடுகள்

ஆக்கம் : க. துரைலிங்கம் (துரையர்)
ச. பிரணதார்த்திகரசர்மா B.A(dip)

பதிப்பு : டிசெம்பர் 1998

வெளியீடு : பாமா வெளியீடு
118, சுன்னாகம் கிழக்கு
சுன்னாகம்.

அச்சகம் : லக்சு கிறபிக்ஸ்

கிடைக்குமிடங்கள் :

பூபாலசிங்கம் புத்தகசாலை
340, செட்டியார் தெரு, கொழும்பு 11.

இன்ர மொட்
காலி வீதி, வெள்ளவத்தை.

32/=

பயனுள்ள நூல்

இன்றைய அறிவியல் அதிசயங்கள் யாவும் சேர்ந்து, நாம் வாழும் உலகினை நமது உள்ளங்கைக்குள் கொண்டு வந்து விட்டன. ஆனாலும் நாங்கள் வாழும் உலகிலே அறியப்படாத செய்திகள் இன்னும் நிறையவே உள்ளன.

கவிஞர், துரையர் நல்ல அறிஞர்களிலே ஒருவர். இளந் தலைமுறையினருக்கு உதவும் விதத்திலே நூல்களை ஆக்கும் பண்பாளர். இன்னொரு நல்லாசிரியரான S.Pசர்மாவுடன் சேர்ந்து இந் நூலை உருவாக்கியுள்ளார்.

இன்று சின்னஞ்சிறுநாடுகள் பெரிய நாடுகளுக்கு வழிகாட்டுகின்றன. கண்டுபிடிப்புகள் செய்கின்றன. இவற்றையெல்லாம் தேனி போலத் தேடிச் சேகரித்து அருமையான நூலாக ஆக்கியுள்ள கவிஞர் துரையர் - ஆசிரியர் சர்மாவை மனமாரப் பாராட்டுகின்றேன். இப்பணி தொடர்க !

– செ. யோகநாதன் –

02.12.1998.

என்னுரை

அன்று
"ஐம்பது நாடுகளை அறியுங்கள்" என்று தந்தேன்
போற்றினீர்கள் புகழும் பொருளும் கிடைத்தன.

இன்று
எஸ். பி. சர்மாவும் நானும் இணைந்து
"நாற்பத்தாறு நாடுகள் " என்று தந்துள்ளோம்
நல்லதாய், பயனுள்ளதாய், புதுமையாய்
தருவது எமது ஆவல்
இந்த ஆவல் நிறைவுக்கு
கவித்துவக் கலைஞர் தவம் கைகொடுத்தார்
நூலிற்குத் தோரணமாய் எழுத்தாள நண்பர்
செ. யோகநாதன் அவர்களின்
முன்னுரை அமைந்து அணி செய்கிறது.
படவரைவுக்கு காண்டீபன்
பதிவெடுக்க செல்வி நி. கலைச்செல்வி உதவினர்.
எல்லோருக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள் !

– துரையர் –

# அவுஸ்திரியா
# Austria

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | வியன்னா |
| 2. | பரப்பு | – | 83,858 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 8 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 98 % |
| 5. | தலா வருமானம் | – | 23,159 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 77 |
| 7. | நாணயம் | – | ஷில்லிங் |
| 8. | வாழும் இனமக்கள் | – | ஜேர்மனியர், சிலாவியர் கங்கேரியர், செக் |
| 9. | அரச மொழி | – | ஜேர்மன் |
| 10. | சமயம் | – | கத்தோலிக்கம் |
| 11. | உற்பத்திகள் | – | இயந்திரங்கள், பார்லி, இரசாயனங்கள் |

அவுஸ்திரியாவில் பல இன மக்கள் வாழ்கின்றார்கள். இங்கு சமஷ்டி முறையிலான குடியரசு ஆட்சி நடைபெறுகிறது. இரண்டாம் உலகப் போரிலே முக்கிய இடம் வகித்த நாடுகளில் அவுஸ்திரியாவும் ஒன்றாகும். முதலாம் உலகப் போரின் முடிவில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையினால் அவுஸ்திரியாவிற்கு நட்டங்கள் ஏற்பட்டது தடுக்க முடியாததாகி விட்டது.

# அவுஸ்திரேலியா
# Australia

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | கான்பெரா |
| 2. | பரப்பு | – | 7,682,300 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 18 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 99 % |
| 5. | தலா வருமானம் | – | 19,100 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 77 |
| 7. | நாணயம் | – | டாலர் |
| 8. | வாழும் இனங்கள் | – | ஆங்கிலேயர் ஆதிக்குடிகள் |
| 9. | அரச மொழி | – | ஆங்கிலம் |
| 10. | சமயம் | – | கிறிஸ்தவம் பல பிரிவுகள் |
| 11. | உற்பத்திகள் | – | கோதுமை, பால் பொருட்கள் |

அவுஸ்திரேலியா ஒரு சுதந்திர ஜனநாயக நாடு. இங்கு வாழ்பவர்கள் 1788 பிரித்தானியாவிலிருந்து பத்து கப்பல்கள் மூலம் வந்து குடியேறியவர்களின் வழித்தோன்றல்களும் ஆதிவாசிகளின் வழித்தோன்றல்களுமாவர். ஒரு கண்டமே ஒரு நாடாகவுள்ளது இங்குதான். தங்கம் எடுக்கும் இந்நாட்டில் பாராளுமன்ற ஆட்சி முறை நடைபெறுகிறது. கல்வி வளர்ச்சிக்காகப் பெருந்தொகை பணத்தை செலவிடும். இங்கு பத்தொன்பது பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன.

# இலங்கை
# Sri Lanka

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ஸ்ரீ ஜெயவர்தன புர |
| 2. | பரப்பு | – | 65,610 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 17.9 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 90% |
| 5. | தலா வருமானம் | – | 578 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 72 |
| 7. | நாணயம் | – | ரூபா |
| 8. | வாழும் இனங்கள் | – | சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர் |
| 9. | சமயம் | – | பௌத்தம், இந்து இஸ்லாம், கிறிஸ்தவம் |
| 10 | அரச மொழி | – | சிங்களம் |
| 11. | பிற மொழிகள் | – | தமிழ், ஆங்கிலம் |
| 12. | உற்பத்திகள் | – | தேயிலை, இறப்பர், கொக்கோ தெங்கு, நெல், இரத்தினம் |

இந்து சமுத்திரத்தின் முத்தென மிளிர்வது இலங்கை. இயற்கை வளம் நிறைந்த இங்கு உல்லாசப் பயணிகள் வருவது சகசமாகிவிட்டது. இங்கு ஜனாதிபதியின் கீழ் பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. பண்டைக் காலந் தொடக்கம் வாசனைத் திரவியங்களுக்கும் இரத்தினக் கற்களுக்கும் யானைத் தந்தங்களுக்கும் பேர் எடுத்தநாடு. சிங்களவர்களும் தமிழர்களும் இந்நாட்டினை ஆட்சி செய்ததாகச் சரித்திரங்கள் கூறுகின்றன. இலங்கை 1948 பெப்ரவரி 4ம் திகதி ஆங்கில ஆட்சியாளரிடமிருந்து சுதந்திரம் கிடைத்தது. இருந்தும் தமிழ் பேசும் மக்களுக்குரிய உரிமைகள் கொடுபடாததை சகல இனத்தவர்களும் உணர்ந்தும் தாமதமானதால் போராட்டங்கள் தொடர்கின்றன.

# இந்தியா
# India

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | - | புதுடில்லி |
| 2. | பரப்பு | - | 3,287,263 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - | 953 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - | 52.1 % |
| 5. | தலா வருமானம் | - | 335 $ |
| 6. | ஆயுட்காலம் | - | 62 |
| 7. | நாணயம் | - | ரூபா |
| 8. | வாழும் இனமக்கள் | - | ஆரியர், திராவிடர் |
| 9. | அரச மொழி | - | இந்தி |
| 10. | பிற மொழிகள் | - | 15 அங்கீகரிக்கப்பட்ட மொழிகள் |
| 11. | சமயம் | - | இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் |
| 11. | உற்பத்திகள் | - | தேயிலை, கோதுமை, சணல் |

குடியரசு நாடான இந்தியாவில் இருபத்தெட்டு மாநில ஆட்சிகள் நடைபெறுகின்றன. வெவ்வேறு பேச்சு மொழிகள் இருக்கின்றன. உலகப் புகழ்பெற்ற தாஜ்மஹால் மாளிகையும், அஜந்தா, எல்லோரா போன்ற குகைக்கலைகளையும் உள்ளடக்கிய நாடு. மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களைத் தந்ததும் இந்நாடே. தென்கிழக்காசியாவின் மகாத்மாகாந்தி, ரவீந்திரநாத் தாகூர், சுப்பிரமணிய பாரதியார் போன்ற பெரியார்கள் பிறந்து வாழ்ந்தமை பெருமைக்குரிய விடயமாகும். மத்திய அரசில் லோகசபையும் இராச்சிய சபையும் மந்திரி சபையும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

# மாலைதீவு
# Maldives

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | - | மாலே |
| 2. | பரப்பு | - | 298 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - | 2.4 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - | 93 % |
| 5. | தலா வருமானம் | - | 726 $ |
| 6. | ஆயுட்காலம் | - | 62 |
| 7. | நாணயம் | - | ருபியா |
| 8. | வாழும் இனமக்கள் | - | அரேபியர், திராவிடர், சிங்களவர் |
| 9. | அரச மொழி | - | டிவெக், அரபு |
| 10. | சமயம் | - | இஸ்லாம் |
| 11. | உற்பத்திகள் | - | மாஸ் கருவாடு, கடற்றொழில் |

இலங்கைக்குக் கிட்டவுள்ள சிறுதீவுகளின் கூட்ட நாடாகும். பொருளாதாரத்தில் குறைவான பத்துச் சிறிய நாடுகளில் இதுவும் ஒன்றாகும். கல்வியிலும் மிகவும் பின்தங்கியநாடு. இங்கு ஜனாதிபதி ஆட்சி நடைபெறுகிறது. இங்கு வாழ்பவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். உலகில் புகழ்பெற்ற மாஸ் கருவாடு உற்பத்தி இங்கு நடைபெறுகிறது.

# தாய்லாந்து
# Thailand

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | பாங்கொக் |
| 2. | பரப்பு | – | 513,115 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 58.0 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 89% |
| 5. | தலா வருமானம் | – | 2,157 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 69 |
| 7. | நாணயம் | – | பாத் |
| 8. | வாழும் இனங்கள் | – | தாய், சீனர் |
| 9. | அரச மொழி | – | தாய் |
| 10. | சமயம் | – | பௌத்தம், இஸ்லாம் |
| 11. | உற்பத்திகள் | – | நெல், இறப்பர்<br>கைத்தொழிற் பொருட்கள் |

மன்னராட்சி நடைபெறும் நாடு தாய்லாந்து. பௌத்த நாடான இங்கு ஐக்கிய நாடுகள் சபையின் சில இலாகாக்களின் தலைமை அலுவலகங்கள் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நான்கு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்ட இந்நாடு இயற்கை இறப்பர் உற்பத்தியில் முன்னணி வகிக்கும் நாடுகளில் ஒன்றாகும்.

# பிரேசில்
# Brezil

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | பிரேசிலியா |
| 2. | பரப்பு | – | 8,511,965 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 159.1 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 81 % |
| 5. | தலா வருமானம் | – | 3,242 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 67 |
| 7. | நாணயம் | – | ரியால் |
| 8. | வாழும் இனங்கள் | – | ஐரோப்பியர்<br>ஐரோப்பிய – இந்தியர் |
| 9. | அரச மொழி | – | போர்த்துக்கல் |
| 10. | பிறமொழி | – | ஆங்கிலம் |
| 11. | சமயம் | – | கத்தோலிக்கம் |
| 12. | உற்பத்திகள் | – | கோதுமை, கோப்பி,<br>பாற் பொருட்கள் |

பிரேசில் தென் அமெரிக்காவிலுள்ள பெரிய நாடாகும். இந் நாட்டில் அமேசன் நதி பாய்கின்றது. உலகில் ஐந்தாவது சனத்தொகை கூடிய நாடாகும். இது ஒரு விவசாய நாடாகும். குடியரசு நாடான இங்கு இராணுவச் சட்டங்களும் உள்ளன. ஜனாதிபதி நாட்டின் தலைவராவார். தேசிய சபைகள் இரண்டின் மூலம் ஆட்சி நடைபெறுகிறது.

## கயானா
# Guyana

1. தலைநகரம் – ஜார்ஜ்டவுன்
2. பரப்பு – 214,969 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 8.2 மில்லியன்
4. எழுத்தறிவு – 95 %
5. தலா வருமானம் – 572 $
6. ஆயுட்காலம் – 66
7. நாணயம் – கயானா டொலர்
8. வாழும் இனமக்கள் – இந்தியர், கறுப்பர்
9. அரச மொழி – ஆங்கிலம்
10. சமயம் – கத்தோலிக்கம், இந்து
11. உற்பத்திகள் – விவசாயப் பொருட்கள், சீனி

தென் அமெரிக்காவிலுள்ள மூன்று கயானாக்களில் இது ஒன்றாகும். இங்கு இந்தியாவிலிருந்து சென்று குடியேறியவர்களும் கறுப்பின ஆதிக்குடிகளும் வாழ்கின்றனர். இது சிறிய நாடாக இருந்த போதிலும் விவசாயத் துறையில் முன்னேறி வருகிறது. இங்கு இந்துக்கள் 55 வீதத்தினர் வாழ்கின்றார்கள். திரிந்த திராவிட மொழிச் சொற்களை அங்குள்ள அனேகருக்கு வைத்திருப்பதைக் காணலாம்.

## கிறீஸ்
# Greece

1. தலைநகரம் – எதென்ஸ்
2. பரப்பு – 131,990 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 10.4 மில்லியன்
4. எழுத்தறிவு – 92 %
5. தலா வருமானம் – 7,053 $
6. ஆயுட்காலம் – 78
7. நாணயம் – டிரச்மா
8. வாழும் இனமக்கள் – கிரேக்கர்
9. அரச மொழி – கிரேக்கம்
10. பிற மொழிகள் – ஆங்கிலம்
11. சமயம் – கிரேக்க ஓதோடொக்ஸ்
12. உற்பத்திகள் – இரசாயனப் பொருட்கள், கப்பல், புகையிலை

கப்பல் போக்குவரத்திற்கும் வணிகத்திற்கும் பிரசித்தி பெற்றது கிறீஸ் நாடு. இது சரித்திரங்கள் கூறும் நாடாகும். இலியட் ஒடிசி ஆகிய உலகப்புகழ் இதிகாசங்களைத் தந்ததும் இந்நாடே. கிறீஸ் நாட்டிற்றான் மரதன் ஓட்டப் போட்டி முதலில் ஆரம்பிக்கப் பட்டது. அன்று கட்டிய நாடக அரங்குகள் இன்றும் இடிபாடுகளுடன் இருப்பதைக் காணலாம். உல்லாசப் பயணிகள் வருகை தரும் இந்நாடு ஒரு குடியரசு நாடாகும்.

# சீனா
# Chaina

1. தலைநகரம் – பீக்கிங்
2. பரப்பு – 9,561,000 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 1,190.9 மில்லியன்
4. எழுத்தறிவு – 80 %
5. தலா வருமானம் – 361 $
6. ஆயுட்காலம் – 69
7. நாணயம் – ஜென்
8. வாழும் இனமக்கள் – சீனர்
9. அரச மொழி – சீனம்
10. சமயம் – கொன்பூசியஸ், பௌத்தம்
11. உற்பத்திகள் – நெல், பட்டு, நவீன யந்திரங்கள்

மக்கள் சீனக் குடியரசு என இதனை அழைப்பர். இது பொதுவுடைமைத் தத்துவத்தைக் கடைப்பிடிக்கும் பெரிய நாடாகும். உலக அதிசயங்களில் ஒன்றான நெடுஞ்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. சீனமக்களே வெடி மருந்தின் உபயோகத்தையும் உலகுக்குத்தந்தவர்கள். சீன மக்கள் மேலிருந்து கீழாக எழுதுவார்கள். முதலில் பட்டு உற்பத்தியில் ஈடுபட்டவர்களும் அச்சியந்திரத்தைப் பாவனைக்குக்கொண்டு வந்தவர்களும் இவர்களே.

# நியூசிலாந்து
# Newzerland

1. தலைநகரம் – வெலிங்டன்
2. பரப்பு – 269,057 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 4.5 மில்லியன்
4. எழுத்தறிவு – 99 %
5. தலா வருமானம் – 12.530 $
6. ஆயுட்காலம் – 76
7. நாணயம் – நியூசிலாந்து டாலர்
8. வாழும் இனமக்கள் – ஐரோப்பியர்
9. அரச மொழி – ஆங்கிலம், மயோரி
10. சமயம் – அங்கிலிக்கம் வேதம் கத்தோலிக்கம்
11. உற்பத்திகள் – பாற்பொருட்கள், கம்பளம் இறைச்சி

இது ஒரு முடிக்குரிய குடியரசு நாடாகும். இங்கு பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. நியூசிலாந்தில் ஒன்பதினாயிரம் அடி உயரத்தில் எரிமலை ஒன்று உள்ளது குறிப்பிடத்தக்கது.

# இத்தாலி
# Italy

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ரோம் |
| 2. | பரப்பு | – | 301,278 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 57.1 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 97 % |
| 5. | தலா வருமானம் | – | 17,356 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 78 |
| 7. | நாணயம் | – | லிரா |
| 8. | வாழும் இனமக்கள் | – | இத்தாலியர் |
| 9. | அரச மொழி | – | இத்தாலி |
| 10. | சமயம் | – | ரோமன் கத்தோலிக்கம் |
| 11. | உற்பத்திகள் | – | கோதுமை, பழவகைகள், கார், கந்தோர் உபகரணங்கள் |

ரோமன் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களின் பிரதான நாடு. இத்தாலி பண்டைய கலைச் செல்வங்கள் நிறைந்த நாடு. மேதைகளான ஓவியகர், டாவின்சி போன்றோரை உலகிற்குத் தந்தநாடு. உலக அதிசயங்களில் ஒன்றான சாய்ந்த கோபுரம் இங்கு உள்ளது. உலகிலே பெரிய தேவாலயங்கள் கூட இங்குதான் உள்ளன. இந்நாட்டினுள்ளே வத்திக்கான் அரசு அமைந்துள்ளது. தேர்தல் மூலமான பாராளுமன்ற ஆட்சி இங்கு நடைபெறுகிறது.

# பர்மா (மியான்மா)
# Burma

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ரங்கூன் |
| 2. | பரப்பு | – | 676,553 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 45.6 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 78 % |
| 5. | தலா வருமானம் | – | 1,238 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 58 |
| 7. | நாணயம் | – | கயாத் |
| 8. | வாழும் இனமக்கள் | – | பர்மியர், இந்தியர் |
| 9. | அரச மொழி | – | பர்மியமொழி, ஆங்கிலம் |
| 10. | சமயம் | – | பௌத்தம் |
| 11. | உற்பத்திகள் | – | தேக்கு, இறப்பர், சணல், நெல் |

தென் கிழக்காசிய நாடுகளில் ஒன்றான பர்மா இலங்கையுடன் பண்டைக் காலத்தில் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்ததாக தகவல்கள் கூறுகின்றன. 1948 ஆம் ஆண்டு சுதந்திர பர்மா உருவாக்கப்பட்டது. ஒரு கட்சி பாராளுமன்ற ஆட்சிமுறை இங்கு நடைபெறுகிறது.

# ஐக்கிய அமெரிக்கா
# United States of America

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | – வாஷிங்டன் |
| 2. | பரப்பு | – 9,372,614 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – 260.6 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – 96 % |
| 5. | தலா வருமானம் | – 24,279 $ |
| 6. | ஆயுட்காலம் | – 77 |
| 7. | நாணயம் | – டொலர் |
| 8. | வாழும் இனமக்கள் | – வெள்ளையர், ஐரோப்பியர் கறுப்பர் |
| 9. | அரச மொழி | – ஆங்கிலம் |
| 10. | சமயம் | – புரட்டஸ்தாந்து, கத்தோலிக்கம் |
| 11. | உற்பத்திகள் | – கோதுமை, பருத்தி, இயந்திர வகைகள் |

ஐக்கிய அமெரிக்கா ஒரு சமஷ்டிக் குடியரசு நாடாகும். ஐம்பத்திரண்டு மாநிலங்களை கொண்ட இது ஒரு வல்லரசு. பெருமைக்குரிய ஆபிரகாம்லிங்கன் அவர்கள் இங்குதான் பிறந்தார். உற்பத்தித் துறையில் குறிப்பாகப் பருத்தி போன்றவற்றில் உலகிலே முன்னணியில் நிற்கிறது. ஐக்கிய அமெரிக்கா சந்திர மண்டலத்திற்கு அனுப்பிய மனிதன் நீல் ஆம்ஸ்ரோங் முதலில் சந்திரனில் கால் வைத்தார். உலகிலே பெரிய நீர்வீழ்ச்சியான நயகரா, உலகிலே உயர்ந்த அணைக்கட்டான போல்டன் ஆகியன இங்குள்ளது குறிப்பிடத்தக்கது.

# சிங்கப்பூர்
# Singapore

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | – சிங்கப்பூர் |
| 2. | பரப்பு | – 616.3 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – 2.9 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – 91 % |
| 5. | தலா வருமானம் | – 20,500 $ |
| 6. | ஆயுட்காலம் | – 75 |
| 7. | நாணயம் | – சிங்கப்பூர் டொலர் |
| 8. | வாழும் இனமக்கள் | – மலாயர், இந்தியர், சீனர், தமிழர், ஐரோப்பியர் |
| 9. | அரச மொழி | – ஆங்கிலம், சீனம் |
| 10. | பிற மொழிகள் | – மலே, தமிழ் |
| 11. | சமயம் | – பௌத்தம், இஸ்லாம் இந்து, கிறிஸ்தவம் |
| 12. | உற்பத்திகள் | – எலக்ரோனிக் மின்சாரப் பொருட்கள். |

சிங்கப்பூரா எனவும் இந்நாட்டினை அழைப்பர். கிழக்கிந்திய வியாபாரக் கம்பனியால் உருவாக்கப்பட்ட நாடு. கிழக்குலகையும் மேற்குலகையும்இணைக்கும் இந்நாட்டில் ஐந்து நட்சத்திரக் கோட்டல்களும் வியாபார ஸ்தலங்களும் கூடுதலாக இயங்குகின்றன. பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. இங்கு பிரதம மந்திரிக்கு அதிகாரம் கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் தேசிய தினம், சீனப் புதுவருடம், தைப்பூசம், தீபாவளி போன்ற கொண்டாட்ட நாட்களுக்கு அரச விடுமுறைகள் வழங்கப்பட்டுள்ளன.

# நேபாளம்
# Nepal

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | கத்மண்டு |
| 2. | பரப்பு | – | 147,181 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 20.9 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 27 % |
| 5. | தலா வருமானம் | – | 180 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 54 |
| 7. | நாணயம் | – | நேபாள ருப்பீஸ் |
| 8. | வாழும் இனமக்கள் | – | குருக்காஸ் இனத்தினர் |
| 9. | அரச மொழி | – | நேபாளி, நேவாளி |
| 10. | பிறமொழிகள் | – | 11 மொழிகள் |
| 11. | சமயம் | – | இந்து, பௌத்தம் |
| 11. | உற்பத்திகள் | – | உப உணவுப் பொருட்கள் மரப் பொருட்கள் |

உலகிலே இந்து கலாச்சாரத்தை பேணுதற்கு உள்ள ஒரே இந்து நாடு நேபாளமாகும். இங்கு இந்து அரசனே ஆட்சி செய்கிறான். இது இந்தியாவின் வட எல்லையில் மலைப் பாங்கான பகுதியைக்கொண்ட நாடாகும். இது ஒரு விவசாய நாடாக இருந்த போதிலும் மரக் கைத்தொழில்களுக்கு குறைவேயில்லை.

# பிரான்ஸ்
# France

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | பாரிஸ் |
| 2. | பரப்பு | – | 543,965 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 57.9 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 99 % |
| 5. | தலா வருமானம் | – | 22,360 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 78 |
| 7. | நாணயம் | – | பிராங் |
| 8. | வாழும் இனமக்கள் | – | பிரான்ஸியர் |
| 9. | அரச மொழி | – | பிரான்ஸ் |
| 10. | சமயம் | – | ரோமன் கத்தோலிக்கம் இஸ்லாம் |
| 11. | உற்பத்திகள் | – | கோதுமை, இயந்திரப் பொருட்கள் |

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற கோட்பாடுகளை புரட்சிமூலம் முதலில் உயிர்ப்பித்த நாடு பிரான்ஸாகும். பிரபுக்களின் கொடுமைகளால் தாங்க முடியாத பொது மக்கள் செய்த புரட்சியே பிரான்ஸியப் புரட்சியாகும். இங்கு தேர்தல் மூலமான பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி நடைபெறுகிறது. ஜனாதிபதியே நாட்டின் தலைவர். ரேடியத்தைக் கண்டு பிடித்த மடம் கியூரி அம்மையார், பினோட்டே, அரிஸ்டோட்டில் ஆகியோர் வாழ்ந்ததும் இந்நாடே.

# சவுதி அரேபியா
# Saudi Arabia

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ரியாத் |
| 2. | பரப்பு | – | 2,250,070 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 17.8 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 62 % |
| 5. | தலா வருமானம் | – | 7,431 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 70 |
| 7. | நாணயம் | – | ரியால் |
| 8. | வாழும் இனமக்கள் | – | அரேபியர் |
| 9. | அரச மொழி | – | அரபு |
| 10. | சமயம் | – | இஸ்லாம். |
| 11. | உற்பத்திகள் | – | பெற்றோலியப் பொருட்கள் |

சவுதி அரேபியாவில் மன்னர் ஆட்சி நடைபெறுகிறது. எண்ணெய் வயல்களால் பெருமளவு பொருள்களைச் சம்பாதிக்கும்நாடு. பாலைவனம் நிறைந்த நாடாக இருந்தபோதிலும் செயல் முறையில் சோலைகளாக்கிக் கொண்டு வருகிறார்கள். இந் நாட்டில் வேலைகளுக்கு அமர்த்தப்பட்டவர்கள் வெளிநாட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. முஸ்லிம் மக்களின் புனிதஸ்தலங்களாகிய மக்காவும் மதினாவும் இங்கு அமைந்திருப்பதால் வருடா வருடம் பெருந் தொகையான மக்கள் வருகை தருகிறார்கள்

# மெச்சிக்கோ
# Mexico

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | மெச்சிக்கோ |
| 2. | பரப்பு | – | 1,972,547 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 88.5 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 92 % |
| 5. | தலா வருமானம் | – | 4,064 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 71 |
| 7. | நாணயம் | – | பெசோ |
| 8. | வாழும் இனமக்கள் | – | மெக்சிக்கன், அமெரிக்கர், இந்தியர், ஸ்பானியர் |
| 9. | அரச மொழி | – | ஸ்பானியா |
| 10. | சமயம் | – | கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து |
| 11. | உற்பத்திகள் | – | கோதுமை, கோப்பி, பொன், பெற்றோலியம், ஈயம், நாகம் |

அமெரிக்க கண்டத்தின் நடுப்பகுதியில் அமைந்திருக்கும் நாடு மெச்சிக்கோ. இது ஒரு சமஷ்டிக் குடியரசு. இங்கு ஜனாதிபதி நாட்டின் தலைவர். தேசிய காங்கிரஸ் அரச பீடமாகும். இதில் இரு சபைகள் உள்ளன. பெற்றோலிய உற்பத்தியில் பெரும் பங்கு வகிக்கும் இந்நாடு குடாப் பகுதி சேர்ந்த நாடாகும்.

# சுவீடன்
# Sweden

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ஸ்டாக் ஹோம் |
| 2. | பரப்பு | – | 449,793 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 8.8 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 100% |
| 5. | தலா வருமானம் | – | 21,220 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 78 |
| 7 | நாணயம் | – | குரோனர் |
| 8. | வாழும் இனமக்கள் | – | சுவீடிஸ் மக்கள் |
| 9. | அரச மொழி | – | சுவீடிஸ் |
| 10. | சமயம் | – | லூதர், கிறிஸ்தவம் |
| 11. | உற்பத்திகள் | – | பாற் பொருட்கள் யந்திரங்கள் |

மன்னராட்சி நடைபெறும் நாடுகளில் சுவீடனும் ஒன்றாகும். இது வடதுருவத்திற்கு அண்மையிலுள்ள நாடானபடியால் பனிபடர்ந்த நாடாகும். கார் உற்பத்திகளில் முக்கிய இடம் வகிக்கும் நாடு.

# யூகோசிலாவியா
# Yugoslavia

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | பெல்கிரேட் |
| 2. | பரப்பு | – | 102,173 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 10.5 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 90 % |
| 5. | தலா வருமானம் | – | 1,510 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 72 |
| 7. | நாணயம் | – | புதிய தினார் |
| 8. | வாழும் இனமக்கள் | – | சிலாவியர், மசிடோனியர் |
| 9. | அரச மொழி | – | மசிடோனிய கங்கேரி |
| 10. | சமயம் | – | ஒதொடக்ஸ், இஸ்லாம், கத்தோலிக்கம் |
| 11. | உற்பத்திகள் | – | உலோகப் பொருட்கள் இயந்திரங்கள், மரப் பொருட்கள் |

இது ஒரு பொதுவுடமை நாடாகும். இங்கு சமஷ்டிக் குடியரசு ஆட்சி நடைபெறுகிறது. யூகோசிலாவியா கிரீஸிற்கு வடக்கே அமைந்துள்ள நாடு. ஒரு கட்சிதான் ஆட்சிப் பீடத்தில் உள்ளது. ஆறு பெரும் உட்பிரிவுகளைக் கொண்டதே இந்நாடு. அணிசேரா இயக்கத்தை உருவாக்க முன்னின்று உழைத்த நாடுகளில் யூகோசிலாவாக்கியாவும் ஒன்றாகும்.

# போலந்து
# Poland

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - வார்சாய் |
| 2. | பரப்பு | - 312,677 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 38.5 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 98 % |
| 5. | தலா வருமானம் | - 2,241 $ |
| 6. | ஆயுட்காலம் | - 72 |
| 7. | நாணயம் | - ஸ்லோட்டி |
| 8. | வாழும் இனமக்கள் | - போலிஸ் |
| 9. | அரச மொழி | - போலிஸ் |
| 10. | சமயம் | - கத்தோலிக்கம், ஓதடெக்ஸ் |
| 11. | உற்பத்திகள் | - கோதுமை, சீனி |

ஐரோப்பாவின் சனத்தொகையில் ஏழாவது பெரிய நாடு போலந்து ஆகும். இரண்டாம் உலகப் போர் தொடக்கமே இந்நாட்டிற்றான். இங்கு மூன்று அரசியல் கட்சிகள் இருக்கின்றன. இது ஒரு பொதுவுடமை நாடாகும். இதனை போலிஸ் மக்கள் குடியரசு என அழைப்பர். மிக பிரசித்தி பெற்ற வார்சோ ஒப்பந்தம் இங்கு உருவானது குறிப்பிடத்தக்கது. பல துறைகளிலும் மிக வேகமாக வளர்ந்துவரும் நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

# போர்த்துக்கல்
# Potugal

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - லிஸ்பன் |
| 2. | பரப்பு | - 92,072 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 9.9 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 83 % |
| 5. | தலா வருமானம் | - 8,611 $ |
| 6. | ஆயுட்காலம் | - 75 |
| 7. | நாணயம் | - எஸ்குடோ |
| 8. | வாழும் இனமக்கள் | - போத்துக்கீசியர்கள் |
| 9. | அரச மொழி | - போத்துக்கீஸ் |
| 10. | சமயம் | - ரோமன் கத்தோலிக்கம் |
| 11. | உற்பத்திகள் | - பொருட்கள் உற்பத்தியும் வர்த்தகமும் |

போத்துக்கல் பலகட்சி ஜனநாயகக் குடியரசு என அழைக்கப்படும். இந்நாடு நாடுகாண் கடலோடிகளின் முன்னோடி நாடு 15ம் நூற்றாண்டளவில் போத்துக்கல் நாடு உலகில் பல நாடுகளைத் தன்னாட்சிக் குட்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையும் அவ்வேளை அவர்கள் ஆட்சிக் குட்பட்டிருந்ததைக் குறிப்பிடத்தக்கது.

# பிரித்தானியா
# Britain

| | | |
|---|---|---|
| 1. தலைநகரம் | – | லண்டன் |
| 2. பரப்பு | – | 244,108 சதுர கி.மீ. |
| 3. சனத்தொகை | – | 58.4 மில்லியன் |
| 4. எழுத்தறிவு | – | 100 % |
| 5. தலா வருமானம் | – | 16,255 $ |
| 6. ஆயுட்காலம் | – | 76 |
| 7. நாணயம் | – | ஸ்ரேலிங் பவுண் |
| 8. வாழும் இனமக்கள் | – | ஆங்கிலேயர் |
| 9. அரச மொழி | – | ஆங்கிலம் |
| 10. சமயம் | – | கத்தோலிக்கம், புரட்டஸ்தாந் |
| 11. உற்பத்திகள் | – | கைத்தொழில், கோதுமை, இயந்திரம் |

ஐக்கிய இராச்சியம பெரிய பிரித்தானியா எனவும் இதனை அழைப்பர். பிரித்தானியா பல நாடுகளைத் தனதாக்கி பெரிய சாம்பிராச்சியமாக ஒரு காலத்தில் விளங்கியது. இந் நாட்டில் இன்று முடியாட்சியும் பாராளுமன்ற ஆட்சியும் ஒருங்கிணைந்து நடைபெறுகின்றது. இந்நாடு பாராளுமன்ற ஜனநாயகத்துக்குப் பிதா நாடாகக் கருதப்படுகிறது. இங்கு பிரபுக்கள் சபை, பிரதிநிதிகள் சபை, மந்திரி சபை என மூன்று சபைகள் இருக்கின்றன. பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்ற நாடுகள் சேர்ந்த அமைப்பே பொதுநலவாயம் ஆகும்.

# துருக்கி
# Turkey

| | | |
|---|---|---|
| 1. தலைநகரம் | – | அங்காரா |
| 2. பரப்பு | – | 779,452 சதுர கி.மீ. |
| 3. சனத்தொகை | – | 60.8 மில்லியன் |
| 4. எழுத்தறிவு | – | 80 % |
| 5. தலா வருமானம் | – | 3,207 $ |
| 6. ஆயுட்காலம் | – | 67 |
| 7. நாணயம் | – | துருக்கி லிரா |
| 8. வாழும் இனமக்கள் | – | துருக்கியர், கோடிஸ் |
| 9. அரச மொழி | – | துருக்கிய மொழி |
| 10. பிற மொழிகள் | – | கோடிஸ் |
| 11. சமயம் | – | இஸ்லாம் |
| 12. உற்பத்திகள் | – | பருத்தி, புகையிலை |

முஸ்லிம் குடியரசு நாடான துருக்கியுள் பழமையான நாகரீக நாடான கொன்ஸ்தாண்டிநோபிள் அடங்கும். இந்நாடு மத்திய ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாகும். இங்கு வாழ்வோர் பருத்தி, புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வங்காள தேசம்
# Bangaladesh

1. தலைநகரம் – டாக்கா
2. பரப்பு – 148,393 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 117.9 மில்லியன்
4. எழுத்தறிவு – 36.6 %
5. தலா வருமானம் – 245 $
6. ஆயுட்காலம் – 57
7. நாணயம் – டாக்கா
8. வாழும் இனமக்கள் – வங்காளியர்
9. அரச மொழி – வங்காளி
10. பிற மொழி – ஆங்கிலம்
11. சமயம் – இஸ்லாம், இந்து
12. உற்பத்திகள் – சணல், கோதுமை, நெற்பொருட்கள்

கிழக்குப் பாகிஸ்தான் என முன்பு அழைக்கப்பட்ட இந்நாடு பிரித்தானிய ஆட்சியில் இந்தியாவின் ஒரு அங்கமாக விளங்கியது. இப்பொழுது தனி நாடாக விளங்குகிறது. விவசாய நாடான இங்கு தேர்தல்மூலமான பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. இதனை வங்காளதேச மக்கள் குடியரசென அழைப்பர். பிறநாடுகளுக்கு சணல், மீன் போன்றவற்றை ஏற்றுமதி செய்வது குறிப்பிடத் தக்கது.

# சோமாலி
# Somali

1. தலைநகரம் – மொகாடிஷு
2. பரப்பு – 637,657 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 8.7 மில்லியன்
4. எழுத்தறிவு – 24%
5. தலா வருமானம் – 106 $
6. ஆயுட்காலம் –
7. நாணயம் – சோமாலி ஷில்லிங்
8. வாழும் இனமக்கள் – சோமாலியர், அரேபியர்
9. அரச மொழி – சோமாலி, அரபு
10. சமயம் – இஸ்லாம், கத்தோலிக்கம்
11. உற்பத்திகள் – தோற்பொருட்கள், மீன்

இது ஒரு குடியரசு நாடாகும். இரண்டாம் உலகப் போருக்குப் பின் இத்தாலியரும், பிரித்தானியரும் இதனைக் கூறுபோட்டு ஆட்சி செய்தனர். ஆனால் 1960 இல் இரண்டு இணைந்து குடியரசானது குறிப்பிடத்தக்கது.

## பிலிப்பைன்ஸ்
## Plippines

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - மணிலா |
| 2. | பரப்பு | - 399,404 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 67.0 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 88 % |
| 5. | தலா வருமானம் | - 839 $ |
| 6. | ஆயுட்காலம் | - 65 |
| 7. | நாணயம் | - பெசோ |
| 8. | வாழும் இனமக்கள் | - மலாயா, மொங்னூசன் |
| 9. | அரச மொழி | - பிலிப்பினோ, ஆங்கிலம் ஸ்பானியா |
| 10. | சமயம் | - கத்தோலிக்கம், புரட்டஸ்தாந், இஸ்லாம் |
| 11. | உற்பத்திகள் | - தெங்குப்பொருள், சீனி, நெல், மரக்கறி |

இங்கு குடியாட்சி நடைபெறுகிறது. தேசியசபை ஒன்றும் ஆட்சிக்கு உதவியாக உள்ளது. இந்நாடு கிட்டத்தட்ட 50 தீவுகள் கொண்ட ஒன்றாகும். இங்கு வாழும் மக்கள் மலேசியாவிலும் இந்தோனேசியாவிலும் இருந்து வந்து குடியேறியவர்கள் என்று சொல்லப்படுகிறது. இங்கு அமெரிக்காவின் தளையிடு முன்பு இருந்ததாக சரித்திர ஆசிரியர் கூறுவர்.

## யப்பான்
## Japan

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - டோக்கியோ |
| 2. | பரப்பு | - 377,765 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 126.10 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 99 % |
| 5. | தலா வருமானம் | - 33,667 $ |
| 6. | ஆயுட்காலம் | - 79 |
| 7. | நாணயம் | - யென் |
| 8. | வாழும் இனமக்கள் | - யப்பானியர் |
| 9. | அரச மொழி | - யப்பான் |
| 10. | சமயம் | - பௌத்தம், ஷிண்ரோ |
| 11. | உற்பத்திகள் | - நெல், கோதுமை, இயந்திர வகைகள், எலக்ரோனிக் மின்சாரப் பொருட்கள் |

யப்பான் நான்கு பெரிய தீவுகளை உள்ளடக்கிய நாடாகும். நிலப்பரப்பு போதாமையால் கடலினை நிலமாக்கும் நாடு. மன்னரின் கீழ் பாராளுமன்ற ஆட்சி நடைபெறும் நாடு யப்பான். உற்பத்தித்துறையில் வளர்ச்சியடைந்த நாடு. இயற்கை வளங்கள் நிறைந்த இங்கு இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது அமெரிக்கா போட்ட அணுக் குண்டினால் கிரோசிமா, நாகசாகி ஆகிய பகுதிகள் கருகிச் சாம்பலாயின குறிப்பிடத்தக்கது.

# கியூபா
# Cuba

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ஹவானா |
| 2. | பரப்பு | – | 114,524 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 2,184,990 |
| 4. | எழுத்தறிவு | – | 96 % |
| 5. | தலா வருமானம் | – | 1,250 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 76 |
| 7. | நாணயம் | – | பெசோ |
| 8. | வாழும் இனமக்கள் | – | ஸ்பானியர் |
| 9. | அரச மொழி | – | ஸ்பானியா |
| 10. | சமயம் | – | கத்தோலிக்கம் |
| 12. | உற்பத்திகள் | – | சீனி, நிக்கல், புகையிலை, இரசாயனப் பொருட்கள் |

மெக்சிக்கோ வளைகுடாவுக்குள் உள்ள நாடு கியூபா. இங்கு ஒரு கட்சிப்பொதுவுடமை ஆட்சி நடைபெறுகிறது. இந்நாடு ஐக்கிய அமெரிக்கா ஆட்சியின் கீழ் இருந்து 1959 இல் ஏற்பட்ட புரட்சியின் விளைவாக 1961 இல் தனிப் பொதுவுடமை நாடாகியது. மெக்சிக்கோவையும் கியூபாவையும் நோக்கும் பொழுது கடலோடி கொலம்பஸை யாரும் மறந்திட முடியாது.

# பாகிஸ்தான்
# Pakistan

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | இஸ்லாமபாத் |
| 2. | பரப்பு | – | 796,095 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 126.3 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 35 % |
| 5. | தலா வருமானம் | – | 422 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 60 |
| 7. | நாணயம் | – | ரூபா |
| 8. | வாழும் இனமக்கள் | – | பஞ்சாபியர், சிந்தியர், உருதர் |
| 9. | அரச மொழி | – | உருது |
| 10. | பிற மொழிகள் | – | ஆங்கிலம், பஞ்சாப் |
| 10. | சமயம் | – | இஸ்லாம் |
| 11. | உற்பத்திகள் | – | நெல், பார்லி, துணி வகைகள், இரசாயனப் பொருட்கள் |

இந்தியாவிலிருந்து பிரிந்து ஒரு தனி நாடாக அமைந்ததே பாகிஸ்தான். இது 1947 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. நீண்ட நாட்களாக இராணுவ ஆட்சியே நடைபெற்றது. சிந்து வெளி நாகரீக நகரங்களான மொகஞ்சதாரோ அரப்பா என்பன பாகிஸ்தானில் அடங்குகின்றன. சிந்துவெளி நாகரீகத்தில் திராவிடர் கலாச்சாரம் இருந்ததாக சரித்திர ஆய்வாளர் கூறுவர். இது ஒரு விவசாய நாடாகும்.

# நைஜீரியா
# Nigeria

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - அபுஜா |
| 2. | பரப்பு | - 923,768 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 108.0 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 52 % |
| 5. | தலா வருமானம் | - 340 $ |
| 6. | ஆயுட்காலம் | - 52 |
| 7. | நாணயம் | - நைரா |
| 8. | வாழும் இனங்கள் | - கோசா, யொருபா, ஈபோ |
| 9. | அரச மொழி | - ஆங்கிலம், ஹைறில் |
| 10. | சமயம் | - இஸ்லாம், கிறிஸ்தவம் |
| 11. | உற்பத்திகள் | - றப்பர், கொக்கோ |

ஜனநாயகக் குடியரசு நாடான நைஜீரியா வளர்ந்து வரும்நாடுகளில் ஒன்றாகும். இந்நாடு 1960 ஆம் ஆண்டு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. சனத்தொகைக்கேற்ப பொருள் வருவாயும் இருக்கின்றது. 1967 இல் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றபோது இரு குழுக்களுக்கும் சில நாடுகள் உதவி வந்தமை குறிப்பிடத் தக்கது.

# ஈரான்
# Iran

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - தெஹிரான் |
| 2. | பரப்பு | - 1,648,000 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 62.5 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 54 % |
| 5. | தலா வருமானம் | - 2,320 $ |
| 6. | ஆயுட்காலம் | - 68 |
| 7. | நாணயம் | - றியால் |
| 8. | வாழும் இனங்கள் | - பேர்சியர், துருக்கியர் |
| 9. | அரச மொழி | - பேர்சியன் |
| 10. | சமயம் | - இஸ்லாம். |
| 11. | உற்பத்திகள் | - பெற்றோலியப் பொருட்கள் கம்பளம் |

மன்னராட்சியிலிருந்து குடியரசான நாடு ஈரான். இங்கு பெற்றோலியப் பொருட்கள் தாராளமாக கிடைக்கின்றன. இந்நாட்டிற்கும் ஈராக்கிற்கும் அடிக்கடி சண்டை நடைபெற்றது. வண்ண வண்ணக் கம்பளங்களை உற்பத்தி செய்து உலகிற்குக் கொடுக்கிறது. மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவரே நாட்டின் தலைவராவர்.

# வியட்நாம்
# Vietnam

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ஹனோய் |
| 2. | பரப்பு | – | 329,566 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 72.0 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 86 % |
| 5. | தலா வருமானம் | – | 181 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 68 |
| 7. | நாணயம் | – | டோங் |
| 8. | வாழும் இனமக்கள் | – | வியட்நாமியர், கம்போடியர் |
| 9. | அரச மொழி | – | வியட்நாம் |
| 10. | பிற மொழிகள் | – | பிரான்ஸ், சீனம் |
| 11. | சமயம் | – | பௌத்தம், கத்தோலிக்கம் |
| 11. | உற்பத்திகள் | – | இறப்பர், மின்பொருட்கள் மரப்பொருட்கள் |


இந்நாட்டினை வியட்நாம் சோசலிசக் குடியரசு எனவும் அழைப்பர். 1940 தொடக்கம் 1970 வரை வடக்குத் தெற்கு என இரு பிரிவாகப் பிரிந்து உள்நாட்டுப் போரில் ஈடுபட்டிருந்தது. 4000 ஆண்டுகள் சரித்திரம் படைத்த இந்நாடு இப்பொழுது பொதுவுடைமை நாடாகும். பொதுவுடைமை கட்சி மட்டுமுள்ள இந்நாட்டில் தேர்தலை மூலம்ஆட்சி நடக்கிறது.

# ஜேர்மனி
# Germany

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | பேர்ன் |
| 2. | பரப்பு | – | 357,020 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 81.5 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 99 % |
| 5. | தலா வருமானம் | – | 23,679 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 76 |
| 7. | நாணயம் | – | டொய்ஸ் மார்க் |
| 8. | வாழும் இனமக்கள் | – | ஜேர்மனியர் |
| 9. | அரச மொழி | – | ஜேர்மன் மொழி |
| 10. | சமயம் | – | புரட்டஸ்தாந்து ரோமன் கத்தோலிக்கம் |
| 12. | உற்பத்திகள் | – | கோதுமை,எலக்ரோனிக் யந்திரம் |

உலக சரித்திரத்திலே ஜேர்மன் நாட்டின் பங்கு பிரதான இடம் வகிக்கின்றது. இரண்டாம் உலகப் போரில் சர்வாதிகாரி கிட்லர் ஜேர்மனியை வழிநடத்திச் சென்றமையும் அதன்பின் தோல்வியைத் தழுவிக் கொண்டமையும் அறிவீர்கள். இந்த ஜேர்மன் இரு பிரிவுகளாக பிரிந்து கிழக்கு மேற்கு ஜேர்மன்களாக இருந்தமையும் இப்பொழுது ஒரே நாடாக பரிணமித்து இருக்கிறது.

# மலேசியா
# Malaysia



| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | கோலாலம்பூர் |
| 2. | பரப்பு | – | 330,434 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 19.7 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 80 % |
| 5. | தலா வருமானம் | – | 3,850 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 71 |
| 7. | நாணயம் | – | ரிங்கிட் |
| 8. | வாழும் இனமக்கள் | – | இஸ்லாமியர், சீனர் தமிழர் |
| 9. | அரச மொழி | – | மலே |
| 10. | பிற மொழிகள் | – | தமிழ், ஆங்கிலம் |
| 11. | சமயம் | – | இஸ்லாம், இந்து, பௌத்தம் |
| 12. | உற்பத்திகள் | – | றப்பர், தகரம் பாம் எண்ணெய் |


இயற்கை அழகு நிறைந்த மலேசியா பல்வேறு கலாச்சாரங்களைக் கொண்டுள்ளது. இஸ்லாம் மன்னர் உள்ள இந்நாட்டில் தேர்தல் மூலமான பாராளுமன்ற ஆட்சி நடைபெறுகிறது. 1963 இல் பிரித்தானியரிடமிருந்து சுதந்திரம் பெற்றது குறிப்பிடத்தக்கது. மலேயருடைய விழாக்களும் சீனருடைய விழாக்களும் தமிழர்களுடைய தைப்பூச விழாப் போன்ற விழாக்களும் இங்கு நடைபெறுகின்றன. இறப்பர் தோட்டங்களும் பாம் எண்ணெய் மரத்தோட்டங்களும் உள்ள நாடாகும். ஆசியான் கூட்டு நாடுகளில் இந்நாடு அங்கம் வகிக்கிறது.

# கம்போடியா
# Cambodia

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | பெனாம் – பென் |
| 2. | பரப்பு | – | 181,035 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 9.9 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 45 % |
| 5. | தலா வருமானம் | – | 230 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 52 |
| 7. | நாணயம் | – | ரியால் |
| 8. | வாழும் இனமக்கள் | – | காமர், சீனர் |
| 9. | அரச மொழி | – | காமர |
| 10. | சமயம் | – | பௌத்தம் |
| 11. | உற்பத்திகள் | – | இறப்பர், மரப்பொருட்கள், அரிசி |

கம்போடியாவை கம்பூச்சியாவெனவும் அழைப்பர். தென்கிழக்காசியாவிலுள்ள சிறிய நாடுகளில் இதுவும் ஒன்றாகும். நீண்ட காலம் பிரச்சனைகளில் சிக்குண்டிருந்த நாடு. வளர்ந்து வரும் நாடுகளில் இதுவும் ஒன்றாகும். இங்குள்ளவர்களில் அநேகர் விவசாயிகளே. இது ஒரு பொதுவுடமை நாடாகும்.


# தென்னாபிரிக்கா
# South Africa



1. தலைநகரம் – கேப்டவுன்
2. பரப்பு – 1,223,201 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 40.5 மில்லியன்
4. எழுத்தறிவு – 62.3 %
5. தலா வருமானம் – 2,882 $
6. ஆயுட்காலம் – 64
7. நாணயம் – ராண்ட்
8. வாழும் இனமக்கள் – கறுப்பர், ஐரோப்பியர் இந்தியர்
9. அரச மொழி – ஆங்கிலம், ஆபிரிக்கம்
10. சமயம் – கிறிஸ்தவம், இந்து
11. உற்பத்திகள் – தங்கம், இரத்தினம், கம்பளம்

ஆபிரிக்காவின் தென்முனையில் அமைந்துள்ளது தான் தென்னாபிரிக்கா. இங்கு ஐரோப்பியர் குறைந்த வீதத்தினராகவும் கறுத்த இனத்தவர் கூடிய வீதத்தினராகவும் வாழ்கின்ற போதிலும் ஐரோப்பியரின் ஆட்சியே முன்பு நடைபெற்றது. இன்று கறுத்த இனத் தலைவர் மண்டேலாவின் ஆட்சி நடைபெறுகிறது. இது ஆபிரிக்காவின் தென்பகுதி நாடுகளுக்கு துறைமுக நாடாக விளங்குகின்றது.

# கனடா
# Canada



1. தலைநகரம் – ஒட்டாவா
2. பரப்பு – 9,976,139 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 29.2 மில்லியன்
4. எழுத்தறிவு – 99 %
5. தலா வருமானம் – 18,982 $
6. ஆயுட்காலம் – 78
7. நாணயம் – கனடா டொலர்
8. வாழும் இனமக்கள் – பிரித்தானியர், பிரான்சியர், எஸ்கிமோவர்
9. அரச மொழி – ஆங்கிலம், பிரான்சு
10. சமயம் – கத்தோலிக்கம்
11. உற்பத்திகள் – கோதுமை, பார்லி, உருளைக் கிழங்கு

கனடா ஒரு சமஷ்டிக் குடியரசு நாடாகும். இது உலகில் இரண்டாவது பெரிய நாடு. இன்றைய கனடாவின் சரித்திரம் தொடங்கிக் கிட்டத்தட்ட 480 வருடங்களாகின்றன. இந்நாடு பத்து மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. விவசாய இயந்திர உற்பத்தியிலும் மீன்பிடித்துறையிலும் முக்கிய ஈடுபாடுடைய நாடு.

# லிபியா
# Libya

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | திரிபோலி |
| 2. | பரப்பு | – | 1,759,540 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 5.2 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 64 % |
| 5. | தலா வருமானம் | – | 4,990 $ |
| 6. | ஆயுட்காலம் | – | |
| 7. | நாணயம் | – | லிபியன் தினார் |
| 8. | வாழும் இனமக்கள் | – | அரேபியர் |
| 9. | அரச மொழி | – | அரபு |
| 10. | சமயம் | – | இஸ்லாம் |
| 11. | உற்பத்திகள் | – | முந்திரிகை, தோற் பொருட்கள், பெற்றோலியப் பொருட்கள் |

இந்நாட்டினை லிபியன் மக்கள் சோசலிச அரபுக்குடியரசு எனவும் அழைப்பர். லிபியா சகாராப் பாலைவனத்திற்கு அருகில் அமைந்துள்ளது. தொழில் வளர்ச்சி குறைவாக இங்கு காணப்படுகிறது. கல்வி வளர்ச்சியின் வேகமும் பிறநாடுகளுடன் ஒப்பிடும் பொழுது குறைவாக உள்ளது. 1951 ஆம் ஆண்டு இந்நாடு பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றமை குறிப்பிடத் தக்கது. அணிசேரா இயக்க நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

# நோர்வே
# Norway

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | ஒஸ்லோ |
| 2. | பரப்பு | – | 323,895 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | – | 4.3 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 99 % |
| 5. | தலா வருமானம் | – | 24,060 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 78 |
| 7. | நாணயம் | – | குரோனர் |
| 8. | வாழும் இனமக்கள் | – | நோர்வீஜியர் |
| 9. | அரச மொழி | – | நோர்வே |
| 10. | சமயம் | – | லூதர், கிறிஸ்தவம் |
| 11. | உற்பத்திகள் | – | அலுமினியம், மீன், கப்பல், கடதாசி, எண்ணெய் |

நோர்வே கடல்மட்டத்திற்கும் பள்ளமாக அமைந்துள்ள நாடாகும். இந்நாட்டில் எந் நேரமும் சூரிய ஒளியைக் காணலாம். மன்னராட்சி நடைபெறும்.இங்கு அலுமினிய கடதாசி உற்பத்திகள் முக்கிய இடங்களை வகிக்கின்றன. இந்நாட்டில் ஆதியில் வாழ்ந்தவர்கள் வேட்டையாடுதலிலும் மீன் பிடித்தலிலும் ஈடுபட்டதாக அறியக்கிடக்கிறது. கப்பல் போக்குவரத்துகளில் ஈடுபட்டுள்ள நாடுகளில் நோர்வேயும் ஒன்றாகும்.

# எகிப்து
# Egypt

1. தலைநகரம் – கெய்ரோ
2. பரப்பு – 997,677 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 56.8 மில்லியன்
4. எழுத்தறிவு – 48 %
5. தலா வருமானம் – 700 $
6. ஆயுட்காலம் – 62
7. நாணயம் – பவுண்ட்
8. வாழும் இனமக்கள் – எகிப்தியர், அரேபியர்
9. அரச மொழி – அரபு
10. பிற மொழி – ஆங்கிலம்
11. சமயம் – இஸ்லாம், கத்தோலிக்கம்
12. உற்பத்திகள் – பேரீந்து, கரும்பு, யூரேனியம், பெற்றோலியப் பொருட்கள்

நைல்நதியால் பண்டைக்காலத்தில் நாகரீகப் பெருமையடைந்த நாடுதான் எகிப்து. இதனை ஐக்கிய அரபுக் குடியரசு என அழைப்பர். பண்டைப் பெருமைகளை எடுத்துக்கூறும் வகையில் இன்றும் பிரமிட்டுகள் காட்சி தருகின்றன. பிரசித்தி பெற்ற சுவேஸ் கால்வாயையும் கொண்டுள்ளது எகிப்தாகும்.

# பூட்டான்
# Bhutan

1. தலைநகரம் – திம்பு
2. பரப்பு – 46,500 சதுர கி.மீ.
3. சனத்தொகை – 6.7 மில்லியன்
4. எழுத்தறிவு – 40 %
5. தலா வருமானம் – 415 $
6. ஆயுட்காலம் –
7. நாணயம் – நுகுல்ட்ரம்
8. வாழும் இனமக்கள் – பூட்டான், நேபாளம்
9. அரச மொழி – துல்சி
10. சமயம் – பௌத்தம், இந்து
11. உற்பத்திகள் – உப உணவுப் பொருட்கள் கைவினைப் பொருட்கள்

இந்தியாவின் வட எல்லையில் 24 ஆரம் அடிக்கு மேல் அமைந்துள்ள நாடு பூட்டான். வருடாவருடம் பெருந்தொகையான உல்லாசப் பயணிகள் வந்து செல்கிறார்கள். இந் நாட்டிற்கு சுற்றுலாத் துறையால் பெரும் வருமானம் கிடைக்கிறது. மன்னராட்சி நடைபெறும் இங்கு விவசாயம் மேலோங்கி நிற்கிறது. இந்நாடு துணிவகைகளையும், சீனியையும் இறக்குமதி செய்கிறது.

# ஈராக்
# Iraq

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - பக்தாத் |
| 2. | பரப்பு | - 438,446 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 20.3 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 60 % |
| 5. | தலா வருமானம் | - 2,692 $ |
| 6. | ஆயுட்காலம் | - 67 |
| 7. | நாணயம் | - ஈராக் தினார் |
| 8. | வாழும் இனமக்கள் | - அரேபியர், கேடில் |
| 9. | அரச மொழி | - அரபு |
| 10. | சமயம் | - இஸ்லாம், |
| 11. | உற்பத்திகள் | - பெற்றோலியம், கம்பளி, பேரீந்து |

மெசப்பெத்தோமியா என்று முன்பு அழைக்கப்பட்ட நாடே இன்றைய ஈராக்காகும். இந்நாட்டவர்களை எழுத்துக்களின் முன்னோடிகள் என அழைப்பர். இங்கு உலக அதிசயங்களில் ஒன்றான தொங்கு பூந்தோட்டம் அமைந்துள்ளது. இது ஒரு குடியரசு நாடாகும். பெற்றோலிய நாடுகளில் இதுவும் ஒன்றாகும்.

# இந்தோனேசியா
# Indonesia

| | | |
|---|---|---|
| 1. | தலைநகரம் | - ஜகார்த்தா |
| 2. | பரப்பு | - 1,904,569 சதுர கி.மீ. |
| 3. | சனத்தொகை | - 19.76 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | - 85.7 % |
| 5. | தலா வருமானம் | - 844 $ |
| 6. | ஆயுட்காலம் | - |
| 7. | நாணயம் | - ரூபியா |
| 8. | வாழும் இனமக்கள் | - மலே, சீனர் |
| 9. | அரச மொழி | - இந்தோனேசியா, ஆங்கிலம் |
| 10. | சமயம் | - இஸ்லாம், இந்து, கிறிஸ்தவம், பௌத்தம் |
| 11. | உற்பத்திகள் | - இறப்பர், கோப்பி, பெற்றோலியம், தகரம் |

இந்தோனேசியாக் குடியரசு என அழைக்கப்படும் இது பல தீவுகளைக் கொண்ட நாடாகும். இது தென் கிழக்காசியாவில் அமைந்துள்ளது. இங்கு இராமாயணக் கதைகளும் காட்சிகளும் மக்கள் வாழ்க்கையில் கலந்திருப்பதை இன்றும் காணலாம். முன்பு சோழ மன்னர் ஆட்சி இந்தோனேசியா வரை பரந்திருந்ததாக ஆய்வாளர்கள் கூறுவர். இங்கு தேர்தல் மூலமான பாராளுமன்ற ஆட்சிமுறை நடைபெறுகிறது.

# பெல்ஜியம்
# Belgium

| | | | |
|---|---|---|---|
| 1. | தலைநகரம் | – | புரூஸ்ஸல்ஸ் |
| 2. | பரப்பு | – | 30,521 சதுர கி.மீ. |
| 3. | ஜனத்தொகை | – | 10.1 மில்லியன் |
| 4. | எழுத்தறிவு | – | 99 % |
| 5. | தலா வருமானம் | – | 20,957 $ |
| 6. | ஆயுட்காலம் | – | 76 |
| 7. | நாணயம் | – | பெல்ஜியன் பிராங் |
| 8. | வாழும் இனமக்கள் | – | பிளமிஸ், ஜேர்மன் வாலூன் |
| 9. | அரச மொழி | – | பிளமிஸ் |
| 10. | பிற மொழிகள் | – | பிரான்சீஸ் |
| 11. | சமயம் | – | கத்தோலிக்கம், புரட்டஸ்தாந்து |
| 12. | உற்பத்திகள் | – | கண்ணாடிப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், வெள்ளியம் |

பிரித்தானியாவைப் போல் மன்னரும் இணைந்த ஆட்சி முறை பெல்ஜியம் நாட்டில் இருக்கிறது. பெல்ஜியம் கண்ணாடி என்றால் நம் நாட்டில் தெரியாதவர்கள் இல்லை. இது கைத்தொழிலில் முன்னேறி வரும்நாடு. நாக உற்பத்தியில் உலகே முன்னணியில் உள்ள நாடு பெல்ஜியமாகும்.

